பக்கங்கள்:11

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 09 திங்கட்கிழமை 23.05.2022 கதிர் 199

### இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்தமை மூலம் அரசியல் கட்டமைப்புக்கு எதிரான பொதுமக்களின் சீற்றத்தை ஓரளவு திசை திருப்புவதில் - தணிப்பதில் - ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி கண்டிருக்கிறார் என்பது உண்மை. ☞2

# தமிழக உதவிப் பொருள்கள் இலங்கை வந்து சேர்ந்தன!

## அமைச்சர் பீரிஸிடம் இந்தியத் தூதர் கையளிப்பு



கொழும்பு, மே 23

பாரிய பொருளாதார நெருக்கடியினால் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு வழங்குவதற்கென தமிழக மக்களின் சார்பில் தமிழக அரசினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட முதல் தொகுதி மனிதாபிமான உதவிப் பொருள்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயினால் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் நேற்று மாலை கொழும்பில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன. ☞2

## தெணியான் காலமானார்



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும், வடமராட்சியின் புகழ் பூத்த தேவரையாளி ☞11

## ஐம்பதாயிரம் டொலருடன் ஒருவர் கைது

ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்களை (இலங்கை நாணயப் பெறுமதிப்படி சுமார் ☞11

## அலரி மாளிகையில் ரணில் தங்கி இருக்க மாட்டாராம்

பிரதமர் அலுவலகத்தின் செலவுகளை ஐம்பது சதவீதத்தால் குறைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்த நிலையில், அது தனக்கும் பொருந்தும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக அலரிமாளிகையில் வசிப்பதில்லை என அவர் தீர்மானித்துள்ளார்.

கொழும்பு பிளவர் வீதியில் உள்ள தனது தனிப்பட்ட இல்லத்தில் தங்கியிருந்து, பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி ஆட்சிக் காலத்தில் கூட அலரிமாளிகையில் தங்கியிருக்கவில்லை எனவும், உத்தியோகபூர்வ தேவைகளுக்காக மாத்திரம் ☞2

## முதல்வர் ஸ்டாலினுக்கு ரணில் நன்றி தெரிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் தமிழக அரசு சார்பில் அத்தியாவசிய பொருள்கள், மருந்து பொருள்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ☞2

## வடக்கு ஆளுநரை விட்டுக்கு அனுப்பவும் போராட வேண்டிய நிலைமை ஏற்படலாம்

### எச்சரிக்கின்றது தமிழ்த் தேசியக் கட்சி

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தமிழ் மக்களின் உணர்வுகளுடன் விளையாடினால் அவரை வீட்டுக்கு அனுப்புவதற்காகப் போராட வேண்டிய நிலை ஏற்படும் என தமிழ்த் தேசியக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் ஜெனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

பௌத்த, சிங்கள தரப்பினருடன் பழகுவதை விட, பௌத்த, சிங்களத் தரப்பினருக்கு விசுவாசமாகச் செயற்படும் தமிழர்களுடன் பழகுவது சற்றுக் கடினமாக உள்ளது. ☞2

## வெளிவிவகாரச் செயலர் பதவியை இழந்தார் அட்மிரல் கொலம்பகே!



வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே நீக்கப்படுகின்றார்.

பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவர் மேற்கொண்ட இறுதிநேர முயற்சியும் தோல்வியடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியுறவு அமைச்சின் ☞11

# ஜூன் நடுப்பகுதியில் கலவரம் வெடிக்கும்!

## நிலைமை மோசமாகும் என்கிறார் சம்பிக்க

கொழும்பு, மே 23

ஜூன் மாத நடுப்பகுதியில் நிச்சயமாக மீண்டும் ஒரு தாங்கிக்கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி நிலைமை உருவாகும். அது நிச்சயமாக பாரியளவில் ஒரு கலவரமாக தோற்றம் பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார். ☞2



## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இன்று சி.ஐ.டி. விசாரணையில்

காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது கடந்த 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் இன்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பெற்றுக் கொள்ள உள்ளனர்.

இதற்காக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனை குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. ☞11

## டிக்கோகார்சியாத் தீவிலுள்ள 89 ஈழ அகதிகள் போராட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே. 22

இலங்கைக்கு தென்மேற்கே இந்து சமுத்திரத்தில் பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருக்கும் - அமெரிக்கத் இராணுவத்தளம் அமைந்துள்ள - டிக்கோகார்சியாத் தீவில் தங்கியுள்ள 89 ஈழத் தமிழர்கள் பிரித்தானியா தமக்கு அகதிகள் தஞ்சம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனாலும் இது நிரந்தர வெற்றி அல்ல. பொருளாதார நெருக்கடியால் எகிறி வரும் மக்கள் சீற்றம், அரசியல் நெருக்கடி தொடர்பாக நீறு பூத்திருக்கும் மக்களின் கோபாவேசத்தை கனன்று எழ வைக்கும் சாத்தியமே அதிகம் உண்டு.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் உடனடியாக வெட்டி குறைக்கப்பட வேண்டும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றெல்லாம் மக்கள் கோரிக்கை வலுத்து வருகின்றது.

இதில் முதலாவது விடயத்தை – ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் உடன் வெட்டிக் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை – ஏதோ உடனடியாக நிறைவேற்றப் போவது போன்ற ஒரு மாயை ஜனாதிபதி கோட்டாவின் உரை மூலமும், பிரதமர் ரணிலின் பேச்சு மூலமும் காட்டப்படுகின்றது. ஆனால் அது எவ்வளவு காலத்தில் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று எந்த உறுதிமொழியும் இருவராலும் தரப்படவில்லை. இப்போது எழுந்துள்ள மக்கள் சீற்றத்தை – கொதி நிலையை – தணிப்பதற்கு ஒரு தந்திரமாக அது கோடி மட்டுமே கட்டப்படுகின்றது.

புதிய நீதி அமைச்சராக பதவியேற்றுள்ள விஜயதாஸ ராஜபக்ஷ இந்த விடயம் – 20 ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு கொடுக்கப்பட்டுள்ள மேலதிக அதிகாரங்களைப் பறித்து, 19 ஆம் திருத்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்த வழி செய்யும் 21 ஆவது திருத்தப் பிரேரணை இன்று நடைபெறும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் – என நேற்றுவரை பெருத்த ஆரவாரம் செய்து கொண்டிருந்தார். ஆனால், அது இன்று அமைச்சரவைக் கூட்டத்தில் நடக்காது என இப்போது தெரிகிறது. அதைச் செய்வது மாதிரி காட்டி, மக்களின் சீற்றத்தைத் தணித்துக்கொண்டு, பிறகும் செய்யாமல் தவிர்த்து, தனக்குள்ள அதிகாரங்களைக் கடைசி வரைத் தக்க வைப்பதே ஜனாதிபதியின் திட்டம் என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

21 ஆவது திருத்தம் என்ற பெயரில் எதையும் இப்போது சமர்ப்பித்து அமைச்சரவையில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம், அதை முதலில் சட்டமா அதிபருக்கு அனுப்பி, சரியான சட்டப் பிரேரணை வடிவத்தில் அதைப் பெற்று, பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிப்பது பற்றிப் பார்க்கலாம் என்ற உத்தரவு புதிய நீதி அமைச்சருக்கு ஜனாதிபதியிடமிருந்து பறந்து இருப்பதாகத் தெரிகின்றது.

அதனால் உத்தேச 21 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டப் பிரேரணை என்று புதிய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆரவாரம் பண்ணிய விடயம் இன்று பெரும்பாலும் அமைச்சரவைக்கு வராமல் போகலாம்.

இனி, அடுத்த இரண்டு விடயங்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகுவது மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது ஆகியவை.

'வரும்... ஆனா.. வராது!' என்ற கணக்கு மாதிரி இவையும் – இந்த இரண்டும் – நடக்கும்; ஆனால் இப்போதைக்கு நடக்காது என்பதுதான் நிலைமை.

'2024 வரை தேர்தல் ஏதுமில்லை; பொருளாதார மீளெழுச்சிக்கே முன்னுரிமை; கூட்டணி அரசு திட்டவட்டம்' –என்ற செய்தி இந்த விவகாரத்தின் விளக்கம்தான்.

கோட்டாபய தனது பதவிக் காலம் வரை ஜனாதிபதியாக இருந்து விட்டுத்தான் போவார். ஆனால் போகும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் ஒழுங்கை நடைமுறைப்படுத்திக் கொண்டுதான் அவர் வெளியேறுவார் என்று கூறப்படுகிறது.

புதிய அரசுக் கட்டமைப்பின் தலைவர்களான பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் மனதுக்குள் ஓடும் திட்டம் இதுதான் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பார், தாமும் ஜனாதிபதிப் பதவியில் இருந்து இறங்குவார் என்ற கரட்டுகளை, தங்களது அரசு வண்டியின் முன்னால் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு, மக்கள் என்ற குதிரைகளை அடுத்த இரண்டு வருடங்களுக்குக் கலைத்து ஓட்டலாம் என்று கோட்டா – ரணில் எனும் வண்டிச் சவாரிக்காரர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் மக்கள் என்ற குதிரைகள் அடங்கிப் போகும் சாதுவான பிராணிகளாகத் தென்படவில்லை. சீற்றத்துடன் எகிறும் கொதிநிலைதான் தென்படுகின்றது. பக்கவாட்டில் கண்களை மறைத்து, முன்னால் கரட்டைக் கட்டித் தொங்கவிட்டு, குதிரைகளை ஏமாற்றி ஓடவிட்டுக் காரியம் சாதிக்கலாம் என்ற தந்திரோபாயம் இனியும் பலிக்காது என்றே தோன்றுகின்றது. அரசாங்கம் என்ற குதிரை வண்டியை வண்டிச் சவாரிக்காரர்களுடன் சேர்த்து குதிரை என்ற மக்கள் அடியோடு கவிழ்த்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ரணில் அரசின் மீதி அமைச்சர்கள் இன்றுபதவியேற்பர்என்றுகூறப்படுகிறது.

இதற்கிடையில் –

அரச உயர் நிர்வாகப் பதவிகளில் நிர்வாகத் துறையில் தேர்ச்சி அடைந்த அதிகாரிகளை நியமிப்பதை விடுத்து, முன்னாள் படை அதிகாரிகளை நியமித்தமை மூலம் அரசு நிர்வாகத்தில் பல நெருக்கடிகளை, குழப்பங்களை, எதிர்கொண்டு இப்போது பட்டுத் தெளிந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இப்போது அத்தகைய முன்னாள் படை அதிகாரிகளை ஒவ்வொருவராக வீட்டுக்கு அனுப்பும் வேலையை ஆரம்பித்திருக்கிறார். வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியை வைத்துக்கொண்டு, வெளிவிவகாரத்துறையையே போட்டடித்த முன்னாள் கடற்படைத் தளபதி ஜெயநாத் கொலம்பகே மூடை,முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு தனது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு விட்டார். முன்னைய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரியான அம்மணி ஒருவர் அப்பதவிக்கு வருகின்றார்.

பொதுசனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டு இருந்த மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், நிர்வாக முறை தலை தெரியாமல், நீதித்துறை குறித்துக் குறைப்பட்டு பிரதம நீதியரசருக்கு நேரடியாகக் கடிதம் ஒன்று எழுதி, அதற்காக வாங்கி கட்டிக் கொண்டு இருக்கின்றார். அவரையும் நேரத்துடன் ஜனாதிபதி வீட்டுக்கு அனுப்பக் கூடும்.

சுட்டால்தானே தெரியும் தொடுவது நெருப்பென்று. படை அதிகாரிகளை உயர் சிவில் நிர்வாகப் பதவிகளுக்கு நியமித்துக் கையைச் சுட்டுக் கொண்டுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்று நம்பலாமா? பார்ப்போம்.

– மின்னல் –

---

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிவாரணப் பொருள்கள் நேற்று இலங்கையெள வந்தடைந்துள்ளன. இலங்கை அரசிடம் நிவாரணப் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

---

## வடக்கு ஆளுநரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் தமது எஜமானர்களுக்கு விசுவாசத்தைக் காட்டுவதற்காக தமிழ் மக்களின் உணர்வுகளுடன் விளையாடுகின்றார்கள். வடமாகாண ஆளுநர் அவ்வாறு செயற்படாமல் தமிழ் மக்களின் உணர்வுக்கு மரியாதை கொடுத்து நடக்க வேண்டும். அவ்வாறில்லாமல் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் அவர் விளையாடுவாராக இருந்தால் அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையில் நாம் முன்னின்று செயற்படுவோம்.

மாநகரசபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாகும். புராதன காலத்திலிருந்து யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் கலாச்சார தலைநகராகக் காணப்படுகின்றது. இதில் ஆளுநரின் தலையீடு என்பது வெறுமனே யாழ். மாநகரசபையுடன் முரண்படுவது என்பதைத் தாண்டி தமிழ் மக்களின் உணர்வுகளுடன் முரண்படுகிறார் என்றே கூறமுடியும்.

வடமாகாண ஆளுநரை அவரது பதவியிலிருந்து அகற்றுவதற்குப் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் போராட்டங்களை மேற்கொள்வோம். அத்துடன் வடமாகாண ஆளுநரை மாற்றுவதற்கு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைப்போம். – என்றார்.

---

## அலரிமாளிகையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அலரிமாளிகையை பயன்படுத்தினார் எனவும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், தமது நல்லாட்சி ஆட்சி அரசைப் பின்கதவால் வீழ்த்தி, மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தபோது, தாமே சட்ட ரீதியான பிரதமர் என்று காட்ட அலரிமாளிகையை விட்டு அசையாது ரணில் அங்கு நிலைகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஜூன் நடுப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் நெருக்கிடி நிலை தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார். மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

ஒரு கட்டத்திற்கு மேல் பொருளாதார நெருக்கடியை தாங்கிக் கொள்ள முடியாத மக்களால் கலவரங்கள் உருவாகலாம்.எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய உணவுகளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி வரும்.

இறுதியில் பொருள்களைப் பெற்றுக் கொள்வது மக்கள் மத்தியில் கலவரமாக தோற்றம் பெறும் வாய்ப்புள்ளது. இது கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் போல் இல்லாமல் அரசியல்வாதிகள் சொத்துக்கள் மட்டும் அன்றி நாட்டில் உள்ள அனைவரினதும் சொத்துகளும் கொள்ளையிடப்படும்.

அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் இன்மையால் நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது.

நேச நாடுகளான சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீள் செலுத்தப்படாது என்று ஏப்ரல் மாதம் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்தாமல் புதிய கடன்களை பெற்றுக் கொள்வது பொருத்தமற்றது. தற்போது இது தொடர்பாக தனது அதிருப்திகளை சீனா வெளியிட்டு இருக்கிறது. சீனாவிற்கு இவ்வருட இறுதிக் காலப்பகுதிக்குள் மொத்தமாக சுமார் 920 மில்லியன் டொலர்கள் செலுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கைக்கு உலக வங்கி தற்போது 400 மில்லியன் டொலர்களை வழங்குவதாக தெரிவித்த நிலையில், அதில் ஒரு பகுதியைக் கொண்டு எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

இதன் மூலம் தற்காலிகமாக இப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டாலும், மீண்டும் பொருள்களுக்கு தட்டுப்பாடு மற்றும் வரிசையில் நிற்கும் யுகம் தோன்றும்.

உலக சந்தையில் எரிவாயு உட்பட பல பொருள்களுக்கான விலைகள் குறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் மாத்திரம் அதிக விலைக்கு கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமையில் நாட்டு மக்கள் உள்ளனர்.

இந்த நிலையில் ஜூன் மாத நடுப்பகுதியளவில் மீண்டும் ஒரு தாங்கிக்கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி நிலைமை உருவாகும் – என்றார்.

---

## தமிழக உதவிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுவதுமாக 200 கோடி இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஒன்பதாயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஐம்பது மெற்றிக் தொன் பால் பவுடர், இருபத்தைந்து மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியனவே முதற் கட்ட மனிதாபிமான உதவிப் பொருள்களாக நேற்று இலங்கையிடம்கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த மனிதாபிமான உதவிப் பொருள்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணம் உட்பட இலங்கையின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள பாதிக்கப்பட்ட மற்றும் தேவையுடைய மக்களுக்கு எதிர்வரும் நாள்களில் இலங்கை அதிகாரிகளினால் பகிர்ந்து கொடுக்கப்படவுள்ளன.

கடுமையான பொருளாதார நெருக்கடியினால் அல்லல்படும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவியாக முழுவதும் 560 கோடி இலங்கை ரூபா பெறுமதியான நாற்பதாயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஐந்நூறு மெற்றிக் தொன் பால் பவுடர் மற்றும் அத்தியாவசிய மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் என்பவற்றை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசாங்கம் வழங்குவதற்குத் தீர்மானித்திருந்தது.

இந்த உதவிப் பொருள்களின் முதல் தொகுதி கடந்த 18 ஆம் திகதி சென்னை துறைமுகத்திலிருந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து வைக்க கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த உதவிப் பொருள்களுடன் புறப்பட்ட கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தமையைத் தொடர்ந்து உதவிப் பொருள்கள் உத்தியோகபூர்வமாக நேற்று மாலை இலங்கையிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, பிரதமரின் அலுவலக பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், உணவு ஆணையாளர் திருமதி ஜே. கிருஷ்ணமூர்த்தி, சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிளவுற்ற அதிகார மையம்

**2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் துரத்தியடிக்கப்பட்ட பின்னர் மூன்று ஆண்டுகளில் – 2018 உள்ளூராட்சித் தேர்தல்களோடு – வலிமையான சக்தியாக மீண்டெழுந்தனர் ராஜபக்ஷக்கள்.**

**ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளுடன் பெருவெற்றி, பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற்றமை என்று அவர்களின் வெற்றிச் சரிதம் தொடர்ந்தது.**

**ஆனால் வந்த வேகத்திலேயே – குறுகிய காலத்திலேயே – அவர்களின் ஆதரவுத் தளம் சரிந்தது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என்ற பெரும் நெருக்கடிக்கு முன்னால் ராஜபக்ஷக்களின் செல்வாக்கு நின்று பிடிக்கவில்லை. அதுவும் கூட பொலபொலத்துப் போய்விட்டது.**

**எனினும் தேர்தல்கள் மூலம் கிட்டிய அதிகார வலிமை சட்டரீதியாகக் காலாவதியாகாமையை வைத்து இன்னும் காரியமாற்றிக் கொண்டு – காலத்தை ஒட்டிக் கொண்டு – இருக்கின்றார்கள் அவர்கள்.**

**அந்த அதிகார மையம், தம்பியாரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சுற்றி ஒன்றாகவும், தமையனார் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றி பிறிதொன்றாகவும் இரண்டாகப் பிளந்து கிடக்கின்றது என்று பிரபல ஆங்கில வார இதழ் ஒன்றின் அரசியல் விமர்சகர் குறிப்பிடுகின்றார். அது உண்மைதான்.**

**அரசியல் அதிகார மையம் இரண்டாகப் பிளந்து கிடப்பது மட்டுமல்ல, ஒன்றுக்கு ஒன்று சமாந்தரமாக இரண்டு தளங்களில் கையாளப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.**

**இரண்டும் சமாந்தர தளங்களில் அசைவது பாதிப்பில்லை. ஒன்றுக்கு கொன்று முரணான திசையில் அவை நகர முற்பட்டால்தான் சிக்கல் மோசமாகும். நாட்டின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் வேறு வடிவம் எடுக்கும் ஆபத்தும் கூட உண்டு.**

**இந்த இருதுருவச் சிக்கல்களுக்கு மத்தியில்தான் ஒற்றை ஆளாகப் போய் அரசைப் பொறுப்பேற்றிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான தளத்தில் தமது அரசை முன்கொண்டு செல்ல ரணில் முயன்றாலும், அரசியல் ரீதியிலும் பிற வழிகளிலும் இன்னொரு அதிகார மையமாக பிறிதொரு தளத்தில் நகரும் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ தரப்பு பிரதமர் ரணில் அரசின் சுயாதீன இயக்கத்துக்கு எவ்வளவு தூரம் இடமளிக்கும் என்பது கேள்விக்குறியே.**

**நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் பழைய நிலையை ஏற்படுத்துவதற்காக அரசமைப்புக்கான 21ஆவது திருத்தத்தை இன்று நடைபெறவிருக்கும் புதிய அமைச்சரவையின் கூட்டத்தில் தாம் சமர்ப்பிக்கவிருக்கின்றார் எனப் புதிய நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்.**

**அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பச்சைக் கொடி காட்ட வேண்டும்.**

**இந்த நகர்த்தலை ரணிலின் அரசு வெற்றிகரமாக முன்கொண்டு செல்லுமானால் அதன் – அரசின் – ஸ்திரத்தன்மை மேலும் கூடும். மக்களின் நம்பிக்கை அதிகரிக்கும்.**

**ஆனால் கடவுள் இடம்கொடுத்தும் பூசாரி இடம் கொடுக்காமை மாதிரி, ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் இந்த நகர்வுக்கு தப்பித் தவறி ஜனாதிபதி கோட்டாபய இடம் கொடுத்தாலும், பஸில் தரப்பு, பொதுஜன பெரமுன எம்.பிக்கள் மத்தியில் தனக்கு இருக்கும் செல்வாக்கை வைத்து, இந்தத் திட்டத்துக்கு ஆப்படித்து அதனைத் தடுக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது.**

**ராஜபக்ஷக்கள் அதிகார மையம் இரண்டாகப் பிளந்துள்ள சூழலில் அதற்கு இடையில் சிக்கி ரணிலின் அரசு மாண்டு போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

## அரசுடன் இணைய முன்வருபவர்களுக்கு எனது அமைச்சை வழங்க நான் தயார்!

### பிரசன்ன ரணதுங்க பகிரங்க பேரம்



நாடு ஜனநாயக ரீதியிலேயே முன்னெடுக்கப்படவேண்டுமே தவிர அச்சுறுத்தி அல்லது வேறு விதத்தில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க முடியாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நான்காவது நாளாக இடம்பெற்ற கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மக்கள் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டும். எனினும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள சில ஆயிரக்கணக்கானவர்களுக்காக அரசமைப்பை மீதி செயற்பட முடியாது.

69 லட்சம் மக்கள் வாக்களித்து ஜனாதிபதியைத் தெரிவு செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன கட்சி ஒருபோதும் படுகொலை மூலம் அரசியல் செய்யும் கட்சிகள் அல்ல.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பி. போன்ற கட்சிகள் படுகொலை மூலம் அரசியல் நடத்திய வரலாறுகள் உள்ளன. 88, 89 காலங்களில் அரசியலுக்காக மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி. கிளர்ச்சி காலத்தில் மிக மோசமான படுகொலைகள் நடைபெற்றன.

நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் நாம் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தோம்

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிபந்தனைகளைப் போட்டு அதிலும் அரசியல் இலாபம் தேட முனைந்தார்.

இப்போதும் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்க யாரும் முன் வந்தால் நான் எனது அமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தயாராக உள்ளேன். இந்த நாடு ஜனநாயக ரீதியாக கட்டியெழுப்பப்பட வேண்டும். – என்றார்.

## இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும்

### சர்வதேச நாடுகளின் அரசியல்வாதிகள் வலியுறுத்து

சமாதானமானதும் ஜனநாயகமானதுமான முறையில் தமது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான சுயாட்சி உரிமை இலங்கை வாழ் தமிழ்மக்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியிருக்கும் சர்வதேச நாடுகளைச்சேர்ந்த அரசியல்வாதிகள், கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் சுமார் மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்றுவந்த யுத்தம் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர், மே மாதம் 11 – 18 ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாகவும், அந்த வாரத்தின் இறுதிநாளான 18 ஆம் திகதி போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் நாளாகவும் தமிழ்மக்களால் அனுஸ்டிக்கப்பட்டுவருகின்றது.

அந்தவகையில், கடந்த புதன்கிழமை முள்ளிவாய்க்கால் தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச நாடுகளைச்சேர்ந்த அரசியல்வாதிகள் மற்றும் இராஜதந்திரிகள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதன்படி இது தொடர்பாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொபோரா ரோஸ் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் –

இலங்கையில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்ட அனைத்து உயிர்களையும் தமிழினப்படுகொலை நினைவு நாளில் நினைவுகூருகின்றோம். கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதற்கும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஷோன்சென், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு கனடாவில் அமைக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நிலையத்தில் அஞ்சலி செலுத்தியதுடன், இது தொடர்பாக அவரது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

மேமாதம் 18 ஆம் திகதியை தமிழினப் படுகொலை நினைவு நாளாகப் பிரகடனப்படுத்துவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் கனேடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எண்ணற்ற தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தினேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் 'இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கான நீதி உறுதிசெய்யப்படுவதுடன், சமாதானமானதும் ஜனநாயகமானதுமான முறையில் தமது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான சுயாட்சி உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்' – என்று அமெரிக்காவின் வடகரோலினா மாநில செனட்சபை உறுப்பினர் விலே நிக்கெல் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோழி இறைச்சியின் விலையும் எகிறியது!

இலங்கையின் சந்தையில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் சில்லறை விலை 1,000 ரூபாவை தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை சுமார் 1,050 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

சிங்கள – தமிழ் புத்தாண்டிலிருந்து ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை சுமார் 950 - 980 ரூபாவாக காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முதன்முறையாக இந்த வாரம் கோழி இறைச்சியின் விலை 1,000 ரூபாயைத் தாண்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சமகாலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாளாந்தம் பல பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள்களை இனி பெறுவதற்கு கைபேசிக்கு 'மெசேஜ்' அனுப்பப்படும்

## அமைச்சர் காஞ்சன இப்படி யோசனை



எரிபொருள் நிலையங்களில் இருந்து எரிபொருளை பெறுவதற்கான நேரங்களை பொதுமக்களுக்கு வழங்க எரிசக்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, எரிபொருள் நிலையங்களுக்கு எரி பொருள் தாங்கிய லொறிகள் புறப்பட்டவுடன் மக்க ளுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அறிவிப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன் றில் அவர் இதனை கூறியுள்ளார். தற்போது எரிபொரு ளுக்காக பல மணிநேரங்களாக மக்கள் காத்திருக்கின் றனர் எனவும், இதனைத் தவிர்ப்பதற்காக குறித்த நட வடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உள்ள எரிபொருள் இருப்புக் கள் குறித்த தகவல்களை வழங்கக்கூடிய மொபைல் போன் செயலி உருவாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த 10 நாள்களில் மேற்படி செயலி அறிமுகப்படுத்தப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன் மூலம் எரி பொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை பெற் றுக்கொள்ள முடியும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஆஸ்திரேலிய புதிய பிரதமருடன் இணைந்து பணியாற்ற விருப்பம்

## ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி அல் பானீஸ் உடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த் துள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது. ஆஸ்திரேலி யாவின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அந்தோனி அல்பானீஸுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவு களை பேணுவதற்கும், அதனை மேலும் வலுப் படுத்துவதற்கும் புதிய பிரதமருடன் நெருக்கமாகப் பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஆஸ்திரேலிய பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சித்தலைமையிலான கூட்டணி அதிக ஆசனங்களை வென்றுள்ளது. 151 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் தொழி லாளர் கட்சிக் கூட்டணி 73 ஆசனங்களைக் கைப்பற் றியுள்ளது.

இதனால் தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தனி அல்பானீஸ், ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார். சுமார் ஒரு தசாப்த காலத்தில் ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி ஆட்சியமைக்கவுள் ளமை இதுவே முதல் தடவையாகும்.

ஆஸ்திரேலியர்கள் 'மாற்றத்துக்காக வாக்களித்துள் ளனர்' என்று அல்பானீஸ் மகிழ்ச்சியுடன் ஆதரவாளர் களிடம் தெரிவித்துள்ளார். எனினும் அவர் பெரும்பான் மையைப் பெற முடியுமா என்பது இன்னும் தெளிவா கத் தெரியவில்லை.

# பெரும் நிதி நெருக்கடியில் இலங்கை உதவுவதற்கு சீனா எந்நேரமும் தயார்

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் சீனா சாதகமான பங்கை வகிக்க தயாராக இருக்கின்றது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள் ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வான் வென்பின் இதனைத் தெரிவித்தார். நாளாந்த செய்தி யாளர் சந்திப்பில் பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார். இலங்கை எதிர்கொண்டுள்ள சிரமங்கள் மற்றும் சவால்கள் தொடர்பாக சீனா முழுமையாக அறிந்துள் ளது.

இலங்கையின் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் வினைத்திறனான பங்கை ஆற் றுவதற்கு சீனா தயாராக உள்ளது. இலங்கையின் சீனத் தரப்பிற்கான கடனுக்கு முறையான தீர்வைக் காண இலங்கையுடன் ஆலோசனை நடத்துவதற்கு, சம்பந் தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு சீனா உதவுகிறது.

தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறு வனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளதுடன், இலங்கையின் கடன் சுமையை குறைப் பதற்கும் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் சாதகமான பங்கைத் தொடர்ந்தும் ஆற்றும்.

வெளிநாட்டு முதலீடு மற்றும் நிதிப் பங்காளிகளின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களை உறுதிப் படுத்தவும், அதன் முதலீடு, நிதிச் சூழலின் ஸ்திரத் தன்மை மற்றும் நம்பகத்தன்மையைப் பேணவும் சீனா சுதந்திரமான முயற்சிகளை மேற்கொள்ளும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# திருமலை கடற்படை தளத்தில் 111 டெங்கு நோயாளர்கள்!

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர் களின் தாக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த மாக இந்த வருடம் திருமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர்.

இதில் திருகோணமலை கடற்படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள சுகாதார பணிமனை யில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்க ளாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்பு வெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளன.

இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது – 38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைத்து மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203 நோயாளர்களும், மூதூரில் 203, கிண்ணியா 77,உப்புவெளி 76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ள நிலை யில் கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர் கள் இனங்காணப்பட்ட நிலையை விடவும் இம் முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தி யுள்ளது.

இந்த நிலையில் சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு பணி இடம் பெற்று வருகி றது.

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாக்க பொது மக்கள் அவதானமாக செயற்படவும், தங்களது வீடுகள் காணிகளை சுத்தமாக வைத்திருக்கவும், பாவிக் காத மலசல கூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிக ளையும் உரிய நேரத்தினுள் சுத்தமாக பேணவும், அது போன்று பாடசாலைகள் அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள் வதுடன், சுத்தத்தை பேண நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் பொது மக்களை கேட்டுக் கொள்வது டன், காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும் மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்கு மாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ளவும்.

சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அவதானமாக மக்கள் செயற்படவும் மீண்டும் மீண்டும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படாது உடன் சட்ட நடவடிக்கைகளை இவ்வாறானவர்களுக்கு எதிராக மேற்கொள்வோம். – என்றார்.

# பெருந்தொகையான வருமானத்தை ஈட்டியுள்ள இலங்கை தூதரகங்கள்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் 2021ஆம் ஆண்டுக்குள் 3 ஆயிரத்து 221 மில் லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் கொவிட் – 19 தொற்றுநோய் பரவியதில் இருந்து அதன் செலவினங்களைக் குறைக்க வெளிவிவகார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது,

இலங்கை இராஜதந்திர பணிகளுக்கான கொடுப் பனவுகளை கடுமையாகக் குறைத்தல் மற்றும் இடை நிறுத்துதல் உட்பட்ட நடவடிக்கை மூலம், 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட் டில் இருந்து 1,314 மில்லியன் ரூபாவை வெளிவிவகார அமைச்சு சேமிக்க முடிந்ததாக அமைச்சு தெரிவித் துள்ளது.

மூலதனச் செலவுகளைச் செய்யாதது, வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் 40 அதிகாரிகளை மாற்றமின்றி இலங்கைக்கு இடமாற்றம் செய்தல், தேர்ந் தெடுக்கப்பட்ட பணியகங்களைத் தற்காலிகமாக மூடுவ தற்கான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற செலவினங்களைக் குறைக்க மேலும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், 10.2 மில்லியன் டொலர் செலவிடப்பட் டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் 2021 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 221 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதுடன்,வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவு ரூ. 675 மில்லி யன் என அமைச்சு தெரிவித்துள்ளது.

# தெமோதரை ரயில் நிலைய வனப்பகுதியில் இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டது!

## 40 இற்கும் மேற்பட்ட ஏக்கர் சாம்பலாகியது

(தெமோதரை நிருபர் இராஜரத்தினம் சுரேஷ்குமார்)

தெமோதரை ரயில் நிலையத்தை சார்ந்த வனப்பகுதி யில் இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டதால் 40 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது. பிரதேச மக்கள் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் வனப்பகுதி முற்றாக தீக்கிரையானது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி களைப் பெரிதும் கவர்ந்த சிறப்புமிக்க ரயில் நிலைய மாக தெமோதரை காணப்படுகின்றது இந்த ரயில் நிலை யத்தின் அமைப்பிற்கு இந்த மலைத்தொடர் பெரிதும் அழகான தோற்றத்தை அளிக்கின்றது. இனந்தெரியா தவர்கள் தீ வைக்கப்பட்டமையால் இந்த மலைத் தொட ரில் காணப்பட்ட பாரிய மரங்கள் பசுமையான தோற் றம் அழிவடைந்து உள்ளது. இவ்வாறு வனப்பகுதிகள்



அழிக்கப்படுவதால் நாட்டின் எதிர்காலம் அழிவடை கிறது. பிரதேச மக்கள் தீயை கட்டுப்படுத்துவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் வனப்பகுதி முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

# அரசமைப்பு திருத்தங்கள் தெளிவாக ஆராய்ந்து கொண்டுவரப்படவேண்டும்!

## சட்டத்துறை விரிவுரையாளர் தெரிவிப்பு

அரசமைப்பில் மாற்றங்களையோ திருத்தங்களையோ கொண்டு வரும் போது மிகவும் தெளிவாக ஆராய்ந்து கொண்டுவரப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் தெரிவித்துள்ளார்.

யாழில் 'நாட்டின் புதிய ஆட்சி மலர்வதற்கான மக்களின் பங்களிப்பு' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'தேசிய பட்டியல் ஆசனம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதனூடாக யார் வரலாம் என கூறப்படாவிட்டாலும் அதன் நோக்கம் கல்வியியலாளர்கள் – ஆளுமை மிக்கவர்களை – அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போது நாட்டினுடைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு தேசிய பட்டியல் ஆசனம் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வந்தார் என்ற கேள்விகளுக்கு அப்பால் எவ்வாறு பிரதமர் ஆனார் என்ற கேள்வியும் எழுகின்றது.

துரதிஷ்டவசமாக இலங்கையில் உள்ள எந்தவொரு நீதிமன்றமும் தேர்தலில் தோற்றவர்கள் தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்றம் செல்கின்றமை அரசமைப்புக்கு முரண் என எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை.

இலங்கை அரசமைப்பு தொடர்பில் சில விடயங்களை பொருள்கோடல் மூலம் உணர்த்துவதற்கு நீதிமன்றங்கள் முனைந்தாலும் அவ்வளவு தூரம் நீதிமன்றங்களுக்கு சுயாதீனம் இருக்கவில்லை.

இவற்றுக்கெல்லாம் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு பிரதான காரணமாக இருப்பதோடு அதன் ஊடாகக் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும்.

இலங்கையில் காணப்படுகின்ற நிறைவேற்று ஜனாதிபதி அரசினுடைய தலைவர். அரசாங்கத்தினுடைய தலைவர். முப்படைகளை உடைய தலைவர். அமைச்சரவை உடைய தலைவர் என எல்லையற்ற அதிகாரம் உள்ள ஒரு ஜனாதிபதியாகக் காணப்படுகிறார்.

அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தல், யுத்தத்தை பிரகடனம் செய்தல் ஆகியவற்றிற்கு யாரையும் கலந்து ஆலோசிக்காமல் ஜனாதிபதியே முடிவெடுக்கக் கூடிய அதிகாரத்தை 78 ஆம் ஆண்டு அரசமைப்பு வழங்கியுள்ளது.

எனினும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையாக இருந்தாலும் பிறப்பிக்கும் போது யாரையும் கேட்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை. அது மட்டுமல்லாது நீதித்துறையின் சுயாதீனத் தன்மையே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தலையீடு செய்வதன் மூலம் நீதிமன்ற சுயாதீனம் இல்லாமல் போகிறது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களின் நியமனம் மற்றும் நீதிமன்றத்தால் குற்றவாளி என அடையாளப்படுத்தப்பட்ட ஒருவரை பொது மன்னிப்பின் மூலம் ஜனாதிபதி விடுவிப்பதும் நீதிமன்ற சுயாதீனத்தை சவாலுக்கு உட்படுத்துகிறது.

78 ஆம் ஆண்டு அரசமைப்பின் பிரகாரம் சட்டவாக்கத் துறையான நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றுத் துறையின் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் காலம் நாலரை வருடங்களாகக் கொண்டுவரப்பட்டாலும் 20 ஆவது திருத்தத்தின் மூலம் இரண்டரை வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்றத்தை நிறைவேற்று ஜனாதிபதி கலைப்பது எமது அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதியால் முடியுமே தவிர அவரைப் பதவி நீக்குவதற்கு முடியாது.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கிய போது நீதிமன்றம் தலையீடு செய்து அதனை பிழையென தீர்ப்புக் கூறியதை அனைவரும் அறிந்ததே.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்தபோது சில நியாயப்பாடுகளை கூறினாலும் காலப் போக்கில் அதனை நீக்க வேண்டும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

19 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது முற்றுமுழுதாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென்று கோரினாலும் சில அதிகாரங்களைக் குறைக்க முடிந்தது.

மீண்டும் 20 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட நிலையில் தற்போது 21 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்குவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இங்குதான் நாம் கவனத்தைச் செலுத்தவண்டும் ஜனாதிபதியின் அதிகாரத்தை 21 ஆம் திருத்தம் மூலம் பிரதமரை சர்வ வல்லமை பொருந்திய பிரதமராக மாற்றக்கூடாது. ஆகவே அரசமைப்பில் மாற்றங்களையோ திருத்தங்களையோ கொண்டு வரும்போது மிகவும் தெளிவாக ஆராய்ந்து கொண்டு வரப்பட வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீடுகள் எரிக்கப்படுவதால் ஏற்படுகின்ற வலியை 39 வருடங்களுக்கு முன்பே நாம் உணர்ந்தோம்

## திகாம்பரம் எடுத்துரைப்பு



நாட்டில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்துக்கு பின்னரே பாதிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு அதன் வலி தெரிகின்றது.

ஆனால் இன்றைக்கு 39 வருடங்களுக்கு முன்னரே இந்த வலி எங்களுக்கு தெரியும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ப.திகாம்பரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நான்காவது நாளாக இடம்பெற்ற கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இடம்பெற்ற அசம்பாவிதத்தில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. அதன் வேதனையை அவர்கள் இப்போதுதான் உணர்கின்றனர்.

ஆனால் வீடுகள் எரிக்கப்படுவதன் வேதனையின் வலி 39 வருடங்களுக்கு முன்பே எங்களுக்குத் தெரிகின்றது. 1983 ஜூலை கலவரத்தை நாங்கள் நேரடியாகவே பார்த்தோம்.

அப்போது தமிழ் மக்களின் வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன.

அவர்களின் சொத்துக்களை இல்லாமலாக்கி கொன்று குவித்தார்கள். அதற்காக இந்த சம்பவத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை.

கலவரத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டை வழங்கவேண்டும் என நாங்கள் தெரிவிக்கின்றோம்.

மேலும் சம்பவ தினம் காலை முன்னாள் பிரதமர் ஒரு சில காடையர்களையும் குண்டர்களையும் அலரி மாளிகைக்குக் கொண்டு வந்து, காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

அதன் காரணமாகவே இந்தப் பாரிய அழிவு இடம்பெற்றது. ஏனெனில் காலிமுகத்திடலில் இடம்பெறும் அமைதிப்போராட்டத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால் தற்போது இடம்பெற்ற கலவரத்தை ஜே.வி.பி. மீது சுமத்திவிட முற்படுகின்றனர்.

மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். காஸ் இல்லை. எரிபொருள் இல்லை. அத்தியாவசியப் பொருள்கள் இல்லை.

இந்நிலையில் காலி முகத்திடலில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் மக்கள் கோபப்பட்டு, கலவரத்தில் ஈடுபட்டனர்.

எனவே வீடுகளில் எரித்தவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்பதுடன் மலர் மாளிகைக்கு வந்த மக்களை தூண்டிவிட்ட அமைச்சர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

அதன் மூலமே இதற்கு தீர்வுகாண முடியும். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இந்த அரசாங்கமே காரணம்.

நாட்டில் தேவையான அளவு பணம் இருப்பதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்து வந்தார்.

ஆனால் இன்று நாடு வங்குரோத்து அடைந்திருக்கின்றது. மக்கள் பட்டினியில் சாவும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படும் நிலை இருப்பதாகப் பிரதமர் தெரிவித்திருந்தார். அவ்வாறான நிலை ஏற்பட்டால் பெருந்தோட்ட மக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

அதனால் பெருந்தோட்டங்களில் இருக்கும் தரிசு நிலங்களை அந்த மக்களுக்குப் பிரித்து கொடுத்து விவசாயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆனால் சேர் பெயில் என்று தெரிவித்தவர்கள் இன்று அந்த சேரிடம் சென்று அமைச்சு பதவி பெற்றிருக்கின்றார்கள். இதுதொடர்பில் வெட்கப்படுகின்றோம். – என்றார்.

# விலைபோகின்ற தமிழ் எம்.பிக்களை தேர்தலில் மக்கள் நிராகரிக்கவேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் மோகனதாஸ் கோரிக்கை

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமா? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி விடலாம் என்ற எண்ணம் மாறவேண்டும் என யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற புதிய ஆட்சி மாற்றத்துக்கான மக்களின் பங்களிப்பு என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றம் அடைய வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகும். ஆனால் இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி விட்ட பின்னரும் தரகர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி எதை வேண்டுமானாலும் செய்து விடலாம் என்ற எண்ணம் தற்போது எழுந்துள்ளது. மூன்றில் இரண்டு வேண்டுமா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசுவதற்குத் தரகர்கள் இருக்கிறார்கள் அதனை அவர்கள் விலைபேசி பெற்றுக் கொடுப்பார்கள். இவ்வாறான நிலையில் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விலைபேசி விடலாம் என்ற எண்ணம் மன வேதனையைத் தருகிறது.

எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படி அரசியலுக்கு வந்தார்கள்? தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்பது தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். எமது கலை, கலாசாரம் விழுமியங்கள் தொடர்பில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் முறையாகப் போதிக்கப்படுவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த போது சமூக நீதி என்ற பாடத்திட்டத்தை நடத்தி அந்தப் பாடத்திலே கட்டாயம் சித்தி அடைய வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்கினோம். ஆகவே, விலை பேசி வாங்கி விடலாம் என்ற எண்ணத்தில் செயப்படுபவர்களுக்கு விலை போகத்தயாராக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இனிவரும் காலங்களில் மக்கள் தெரிவு செய்யக் கூடாது.- இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பஸிலின் விருப்பத்துக்கு அமைவாகவே அரசு முக்கிய முடிவுகளை எடுக்கின்றது

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமையுடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதில் தடைவிதிக்கப்படாவிடின் நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தீவிரமடையும்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவின் விருப்பத்துக்கமையவே அரசாங்கம் முக்கிய தீர்மானங்களை முன்னெடுக்கிறது என லங்கா சம சமாஜ கட்சியின் தலைவர் பேராசியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் பொருளாதார நெருக்கடியும், அரசியல் நெருக்கடியும் தீவிரமடைவதற்கு முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானங்களின் காரணமாக அரசியல் நெருக்கடியும் தீவிரமடைந்தது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மக்களாணைக்கு முரணாகச் செயற்பட்ட கூட்டணியில் இருந்து 11 அரசியல் கட்சிகளும் வெளியேறி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் யோசனைக்கு பிரதான எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவிக்காத காரணத்தால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அரசியல் ஸ்திரத்தன்மை பேணப்பட வேண்டும் என்பதால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

நிபந்தனையற்ற எமது ஆதரவை அரசாங்கம் தவறான முறையில் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு 19 ஆவது திருத்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், 21ஆவது திருத்தம் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும் என்ற பொதுக் கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

இரட்டைக் குடியுரிமையுடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்த அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கையாக உள்ளதுடன், மக்களின் பிரதான எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

21ஆவது திருத்தத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படாவிடின் நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தீவிரமடையும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவின் விருப்பத்திற்கமையவே தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய தீர்மானங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை கவலைக்குரியது. – என்றார்.

# சம்பிக்க விரும்பினால் அமைச்சு பதவியை ஒப்படைக்க தயார் என காஞ்சன அதிரடி



'நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க விரும்பினால் மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சுப் பதவியை அவரிடம் ஒப்படைக்க நான் தயார்' என்று மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஏற்கனவே இந்த அமைச்சுப் பதவியை சம்பிக்க ரணவக்க வகித்துள்ளார். அவருக்கு அனுபவம் உள்ளது.

எனவே, அவர் முன்வந்தால் அமைச்சுப் பதவியைக் கையளிக்க நான் தயார். எமக்குப் பதவி முக்கியம் அல்ல. நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதே முக்கியம்.

இதற்காக அரசியல் பேதங்களை மறந்து இணைந்த ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை வரவேற்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் மா அதிபருடன் ஜே.வி.பி. கலந்துரையாடும்!

## அதன் தலைவர் அநுர தெரிவிப்பு



ஆளும் கட்சி உறுப்பினர்களால் தமது கட்சி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவ்வாறு கலந்துரையாடப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று (திங்கட்கிழமை) நடைபெறும் என கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# அருந்திக விமானியாக செயற்படவில்லை ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விளக்கமளிப்பு

கொழும்பு, மே 23

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய விமான சேவையில் ஒரு விமானியாக தான் கடமையாற்றினேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணான்டோ சமீபத்தில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் தற்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு விளக்கமளித்துள்ளது.

அதற்கமைய, ஏ.எல்.பி.ஜி.எஸ்.எல். என்ற ஒரேயொரு விமானிகள் சங்கம் மாத்திரமே இலங்கையில் இருப்பதாகவும், ஆனால் அந்தச் சங்கத்தில் அருந்திக பெர்னாண்டோ எம்.பி. விமானியாக செயற்பட்டதற்கான எந்தவொரு தரவுகளும் இல்லையெனவும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறையின் போது வன்முறை குழுவொன்று தனது வீட்டுக்குத் தீ வைத்ததன் காரணமாக தனது வீடு, விமானப்படையில் பணி புரிந்த கடிதங்கள் உட்பட பல முக்கிய ஆவணங்கள் அழிக்கப்பட்டன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# லசந்த படுகொலை வழக்கு ஜூன் 20 ஆம் திகதி தீர்ப்பு!

கொழும்பு, மே 23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக நெதர்லாந்தின் ஹேக் நகரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் தீர்ப்பு எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது மகள் அஹிம்சா விக்ரமதுங்கவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தற்போது சுவிஸில் வசிக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா சாட்சியமளித்துள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் அதிகாரிக்கு பெற்றோல் வழங்கல் விரட்டியடித்தனர் பேலியகொடவில் மக்கள்!

பேலியகொட பிரதேசத்தில் பொலிஸ் சீருடையில் வந்த அதிகாரி ஒருவர் தனது மகனின் வாகனத்துக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளும் காணொலி ஒன்று இணையத்தில் வெளியான நிலையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் 16 மணித்தியாலங்கள் வரிசையில் நின்று எரிபொருள் பெறத் தயாரான போது, அதனைக் கண்டு கொள்ளாத பொலிஸ் அதிகாரி இடையில் புகுந்து மகனுடைய வாகனத்துக்கு எரிபொருள் பெற்றுள்ளார். இதனால் அங்கிருந்தவர்கள் கோவமடைந்த நிலையில் பொலிஸ் அதிகாரிக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தான் கடமைக்காகவே எரிபொருள் பெற்றேன் என பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். எனினும் பொலிஸ் வாகனமின்றி மகனின் வாகனத்தில் வந்து அவர் எரிபொருள் பெற்றுள்ளார்.

சீருடை அணிந்து அசிங்கமான செயற்பாடுகளில் ஈடுபடாதீர்கள், நாங்கள் 16 மணித்தியாலங்கள் இங்கு வரிசையில் நிற்கின்றோம். கடமைக்கு செல்ல வேண்டுமென்றால் பொலிஸ் வாகனத்தில் வாருங்கள்.

மஹிந்தவை விரட்டிய எங்களுக்கு உங்களைத் துரத்துவது பெரிய ஒரு விடயமல்ல. நாளை உங்கள் காணொலி இணையத்தில் வரும் அப்போது பார்த்துக் கொள்ளுங்கள் என கூறி பொலிஸ் அதிகாரியையும் அவரது மகனையும் பொது மக்கள் அங்கிருந்து விரட்டியுள்ளனர்.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியான நிலையில், மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

# கிளவுட் கம்ப்யூட்டிங்

## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



இன்று தனிப்பட்ட வாழ்க்கையிலும் வணிகத்தி லும் நுட்பியல் அவத்தை பெரும் தாக்கத்தை ஏற்ப டுத்துகிறது. 2020ல் கொவிட் - 19 தாக்கத்துக்கு பின் னர் டிஜிற்றல் செயல்முறைக்கான தேவை வேக மாக அதிகரித்துள்ளது. இந்த சூழலில் கிளவுட் கம்ப் யூட்டிங் நுட்பியல் மனித குலத்தின் எதிர்காலமாகப் பார்க்கப்படுகின்றது.

கிளவுட் கம்ப்யூட்டிங் என்பது இணைய அடிப் படையிலான சேவையாகும். இது இணையம் மூலம் தரவு சேமிப்பு, தரவுத்தளம், நெட்வொர்க்கிங், சர்வர், பகுப்பாய்வு மற்றும் நுண்ணறிவு போன்ற தேவைக் கேற்ப கணினி சேவைகளை வழங்குகிறது.

கொவிட்டுக்குப் பின்னரான சூழல் வேலைத்தளம் வணிகம் என்பவற்றை மாற்றியமைத்துள்ளது. ஒரு கட்டடத்தில் அலுவலகம் தேவையில்லையென்ற நிலை உருவாகிவிட்டது. இப்போது ஒரு மெய்நிகர் அலுவலகத்தை அமைத்து, எங்கிருந்தும் எந்த நேரத் திலும் வணிகத்தை இயக்கலாம், அலுவலகத்தை நிர்வகிக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இப் போதெல்லாம் இது ஒரு பிரபலமான சேவையாக மாறிவருகின்றது. ஏனெனில் இந்த நுட்பியல் வசதி செலவைக் குறைக்கிறது. உற்பத்தித்திறன், வேகம், செயல்திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை அதி கரிக்கிறது. இப்போது, உலகெங்கிலும் பெரும்பாலான வேலைகள் வீட்டிலிருந்தே ஏற்பாடு செய்யப்படு கின்றன. இணையத்தின் தேவை ஒவ்வொரு துறை யிலும் முக்கியம் பெறுகின்றது. குறிப்பாக கல்வித் துறைகள் மற்றும் இ - காமர்ஸ் செயல்பாடுகளில் காணலாம். இதனால், உலகம் முழுவதும் கிளவுட் கம்ப்யூட்டிங்கிற்கான தேவை அதிகரித்து வருகின்றது.

நிறுவனங்களின் பெரும்பாலான தேவைகளை பூர்த்தி செய்ய நான்கு வகையான கிளவுட் கம்ப் யூட்டிங் வசதிகள் உள்ளன. இவை பொது, தனியார், ஹைப்ரிட் மற்றும் சமூக கிளவுட் சேவைகள் ஆகும். பொது கிளவுட் அனைவருக்கும் திறந்திருக்கும். எந்தப் பயனர்களுக்கும் கிடைக்கின்றன.

தனியார் கிளவுட்டில், பொதுவில் கிடைக்காது மற்றும் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகின்றன, மேலும் அவை ஒரு தேவைக்காக மட்டுமே பயன் படுத்தப்படுகின்றன.

'ஹைப்ரிட் கிளவுட் கம்ப்யூட்டிங்' என்பது பொது மற்றும் தனியார் கிளவுட் கம்ப்யூட்டிங் கலவையா கும். எந்தவொரு வணிக நிறுவனத்திற்கும் இது சிறந்த முறையாகும். இது பொது மற்றும் தனியார் சேவைகளை எளிதாக்குகிறது.

'பொது கிளவுட்' கம்ப்யூட்டிங்கில் உள்ள சேவை களை யாராலும் அணுக முடியும், மேலும் தனியார் கிளவுட் கம்ப்யூட்டிங்கில், நிறுவனத்தின் குறிப்பிட்ட பயனர்களால் மட்டுமே அந்த சேவைகளை அணுக முடியும்.

ஹைப்ரிட் கிளவுட் கம்ப்யூட்டிங் முக்கியமாக நிறு வனத்திற்கு வெளியில் இருந்து ஈடுபடுபவர்களுக்கு தேவைப்படுகிறது. இன்சூரன்ஸ், ஹெல்த்கேர், கல் வித் துறைகள் ஹைப்ரிட் கிளவுட் கம்ப்யூட்டிங்கிற் கான உதாரணங்களாகும்.

கிளவுட் கம்ப்யூட்டிங்கில் மூன்று முக்கிய சேவை கள் கிடைக்கின்றன. இவை சேவையக உள்கட்ட மைப்பு (IaaS), மென்பொருள் சேவை (SaaS) மற்றும் சேவையக இயங்குதளம் (PaaS). இந்த அனைத்து சேவைகளும் வெவ்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. IaaS, PaaS ,SaaS ஆகியவை வணிகத்தை திறம்பட நடத்துவதற்கு தேவையான அனைத்து அத்தியாவசிய சேவைகளும் ஆகும். உலகளவில் கிளவுட் கம்ப்யூட்டிங்கின் முதல் ஐந்து முக்கிய வீரர்களாக,

Amazon Web Services
Microsoft Azure
Google Cloud Platform
Alibaba Cloud
IBM

ஆகியன விளங்குகின்றன. இவை தவிர, உலகம் முழுவதும் பல்வேறு கிளவுட் கம்ப்யூட்டிங் சேவை வழங்குநர்கள் உள்ளனர்.

உலகளவில் இன்று வணிகச் செயற்பாட்டிற்கு கிளவுட் கம்ப்யூட்டிங்கிற்கான தேவை அதிகரித்து வருகின்றது. கிளவுட் கம்ப்யூட்டிங் வணிகத்தில் ஒரு 'கேம் சேஞ்சராக' காணப்படுகின்றது. ஏனெனில் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தி தரவு மற் றும் தகவல்களை அணுகுவதற்கான எளிதான வழியை வழங்குகிறது.

மேலும், தரவு சேகரிப்பு மற்றும் நீண்ட காலத் திற்கு தரவுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது அனைத்து வணிகத்திற்கும் மிகவும் முக்கியமானது. கிளவுட் தரவு சேமிப்பகம், எளிதில் அணுகக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய தரவை கிளவுட்டில் சேமிக்க அனுமதிக்கிறது.

கிளவுட்டில் சேமிக்கப்படும் தகவல்கள், தரவுகள் எந்த வகையான திருட்டுகளிலிருந்தும் பாதுகாக் கப்படுகின்றன. ஏனெனில் கிளவுட் சேவைகள் ஒரு எண்ட் - டு - எண்ட் டேட்டா என்க்ரிப்சன் வசதியை யும் வழங்குகின்றன. கிளவுட் கம்ப்யூட்டிங் தரவு இருக்கும் போது, இயற்கை பேரழிவுகள் காரண மாக அதை சேதப்படுத்த முடியாது. இந்தத் தரவுகளை எப்போதும் எளிதாக மீட்டெடுக்க முடியும்.

இன்று பெரும்பாலான நிறுவனங்கள் டிஜிற்றல் செயல்முறைகளை ஏற்றுக்கொள்கின்றன, மேலும் அவை காகிதப்பணிகளைக் குறைக்க விரும்பு கின்றன. கிளவுட் கம்ப்யூட்டிங், ஸ்மார்ட்போன்கள் மற்றும் சாதனங்களில் உள்ள தரவுகளை மொபைல் அணுகலை எளிதாக்குகின்றன. இதனால் வீட்டிலி ருந்தே அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய லாம், கார் அல்லது ரயிலில் பயணம் செய்யும் போதும் பயன்படுத்த முடியும். பாரம்பரிய முறைகளுடன் ஒப் பிடுகையில் இது கணினியை மிகவும் திறமையாக மாற்றியுள்ளது.

கிளவுட் கம்ப்யூட்டிங்கில், கிளவுட் சர்வரில் எல்லா தரவையும் நம்பிக்கையுடன் சேமிக்கலாம். அதாவது





கணினிகள், லேப்டாப், ஸ்மார்ட்போன்கள், ஹார்ட் டிரைவ்கள் போன்றன சேதமடைந்தால், சர்வரில் இருந்து தரவுகளை எளிதாகப் மீளப்பெறலாம்.

கிளவுட் சேவைகள் ஏற்கனவே சக்திவாய்ந்த பயர்வால்கள், பாதுகாப்பு நெறிமுறைகள், வைரஸ் தடுப்பு அல்லது தரவுப் பாதுகாப்புடன் ஒருங்கிணைக் கப்படுகின்றன, அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை கிளவுட் சேவை வழங்குனர்களே கவனித்து வாடிக் கையாளர் கவலைப்பட வேண்டாம் என்பதை உறுதி செய்கிறார்கள்.

இன்று பல இணைய சேவைகள் ஏற்கனவே கிளவுட் கம்ப்யூட்டிங்குடன் ஒருங்கிணைக்கப்பட் டுள்ளன, கிளவுட் கம்ப்யூட்டிங் வணிகத்தின் முக்கிய பகுதியாக சிந்திக்கப்படுகின்றது.

பல நிறுவனங்கள் தங்கள் பணிச்சுமைக்காக கிள வுட் கம்ப்யூட்டிங் சேவைகளை ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளன. உலகம்முழுவதும் 80% பெரிய நிறுவனங்கள் கிளவுட் கம்ப்யூட்டிங்கைப் பயன்படுத் துகின்றன, மேலும் இந்த எண்ணிக்கை 2024 மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே எளிமையாகச் சொன்னால், கிளவுட் கம்ப்யூட்டிங் வணிகத்தை நடத்தவும் வாழ்க்கையை நடத்தவும் சிறந்த 'நுட்பியல் அவத்தை' எனலாம்.



# ஜப்பானுடனான இலகு ரயில் திட்டத்துக்கு இலங்கை முயற்சிக்கவில்லை என அறிவிப்பு

## பிரதமர் அலுவலகம் விடுத்தது

ஜப்பானுடனான இலகு ரயில் போக்குவரத்தை புனரமைக்க இலங்கை முயற்சிக்கவில்லை என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு, மின்சாரம் போன்ற முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் வலியுறுத்தியது.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட பிரதமரின் செயலாளர் சமன் ஏகநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இந்த விடயம் தொடர்பில் எந்தவொரு தரப்பினருடனும் கலந்துரையாடல் நடத்தப்படவில்லை எனவும், இலங்கையில் நிலைமை சீராகும் வரை அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வாய்ப்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தீர்க்க எங்களுக்கு இன்னும் அழுத்தமான பிரச்சினைகள் உள்ளன. உணவு நெருக்கடி உருவாகி வருகிறது, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றை நாங்கள் வழங்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்கட்டமைப்பு திட்டங்கள் தற்போதைய முன்னுரிமை பட்டியலில் அதிகமாக இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கையின் கடன்மீள்செலுத்துகை ஆற்றல் ‘டி’ நிலைக்குத் தரமிறக்கம்!

வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகைகளை இடைநிறுத்துவதாகக் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதையடுத்து இம்மாதம் 18 ஆம் திகதியுடன் சலுகைக்காலம் முடிவடையும் சர்வதேச பிணையங்களுக்கான கொடுப்பனவைச் செய்யத் தவறியமையால் பிட்ச் ரேட்டிங் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையைக் கடன்களை மீளச்செலுத்த முடியாத ‘டி’ நிலைக்குத் தரமிறக்கியுள்ளது.

வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகையை இடைநிறுத்துவதற்கான அறிவிப்பு கடந்த மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து பிட்ச் ரேட்டிங் நிறுவனம் இலங்கையை ‘சி’ நிலைக்குத் தரமிறக்கியிருந்தது.

இந்நிலையில் தற்போது நாட்டை ‘சி’ நிலையிலிருந்து ‘டி’ நிலைக்குத் தரமிறக்கியுள்ள பிட்ச் ரேட்டிங் நிறுவனம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீளச்செலுத்தப்படவேண்டிய வெளிநாட்டுப்பிணையங்களுக்கான கொடுப்பனவு மீளச்செலுத்தப்படாமையே அதற்குக் காரணம் என்றும் விளக்கமளித்துள்ளது.

அதேவேளை நியூயோர்க் நகரைத் தளமாகக் கொண்டியங்கும்மற்றுமொருபிரபலகடன்தரப்படுத்தல் நிறுவனமான மூடீஸ் தரப்படுத்தல் நிறுவனம் கடந்த 19 ஆம் திகதி இலங்கையின் கடன் மீள்செலுத்துகை ஆற்றல் தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி மீளச்செலுத்துவேண்டிய சர்வதேச பிணையங்களுக்கான சலுகைக்காலம் இம்மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவிற்கு வந்திருக்கும் நிலையில், அதற்குரிய கொடுப்பனவைச்செய்யத் தவறியிருப்பதன் காரணமாக இலங்கை முதன்முறையாக அதன் சர்வதேச பிணையங்களைச் மீளச் செலுத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகையை இடைநிறுத்துவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் பொருத்தமான செயற்திட்டத்துடன் இணைந்ததாக வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவிருப்பதாகவும் கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் அறிவித்ததைத்தொடர்ந்து, இலங்கை கடன்களை மீளச்செலுத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிடமும் சீனாவிடமும் மேலும் கடனைக் கோரல்!

இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து புதிய கடன்களை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகளை இலங்கை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த ஆண்டு முழுவதும் எரிபொருள் கொள்வனவுக்காக 100 கோடி அமெரிக்க டொலர்களை திரட்டும் நோக்கத்துடன் இந்த பேச்சுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என எனத் திறைசேரியின் அதிகாரி ஒருவரைக் கோடிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய எரிபொருள் விநியோகம் முடிந்த பின்னரும் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தைத் தொடர்ந்தும் பராமரிப்பதை உறுதி செய்வதற்காக இந்த இரு நாடுகளிடமிருந்தும் தலா 50 கோடி அமெரிக்க டொலர்களைப் பெற முயற்சிப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடமிருந்து பெற்ற டொலர்களில் 20 கோடி அமெரிக்க டொலர் கடன் மட்டுமே மீதமுள்ள நிலையில் இந்த பேச்சு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெயைக் கொள்முதல் செய்ய வெளியுறவு அமைச்சகம் மூலம் திறைசேரி விடுத்த கோரிக்கைக்கு இது வரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

# சமூக வலைத்தளங்களில் வன்முறையை தூண்டிய 225 பேர் தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணைகள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த எந்த கட்சியையும் சாராத அமைதி போராட்டக்காரர்கள் மீது ஆளும் கட்சி ஆதரவாளர்கள் மூர்க்கத்தனமாக நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் பதிவான வன்முறைகள், தீ வைப்புக்கள், சொத்து சேதப்படுத்தல் சம்பவங்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் இவ்வாறான தீ வைப்புக்கள், சொத்து சேதப்படுத்தல் சம்பவங்களுக்கு பல்வேறு சமூக ஊடக கணக்குகள் மற்றும் குழுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும், அது தொடர்பாகக் கிடைக்கப்பெற்றுள்ள 225 முறைப்பாடுகளை மையப்படுத்தி விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அறிய முடிகிறது.

சி.ஐ.டி எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. திலகரத்னவின் கீழ் செயற்படும் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லகீ ரந்தெனியவின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த 225 பேரில் பாடகர்கள், நடிகர், நடிகைகள் பலரும் உள்ளடங்குகின்றனர் என சி.ஐ.டி. தகவல்கள் தெரிவித்தன.

அவர்களுக்கு எதிராக கணினிக் குற்றச் சட்டத்தின் கீழும் குற்றவியல் சட்டத்தின் கீழும் சி.ஐ.டியின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில் வன்முறைகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கினார் எனக் கூறி இவர்களில் பலர் கைது செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

அதன் முதற்கட்டமாகவே, சி.ஐ.டியினரால் தொலைக்காட்சி தொகுப்பாளினி ஒருவர் உள்ளிட்ட மூவர் சி.ஐ.டியின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இந் நிலையில், பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பலர் தாம் பதிவிட்ட பதிவுகளை அழித்துள்ள நிலையில், அந்தப் பதிவுகளை மீளப் பெற்று விசாரணை நடத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது.

இந் நிலையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போதும், சமூக ஊடகங்களில் தகவல்களை பகிரும் போதும் அதன் உள்ளடக்கம் தொடர்பிலும் அதன் ஊடாக ஏற்படக்கூடிய குற்றங்கள் தொடர்பிலும் புரிதலுடன் செயற்படுமாறும் பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பொலிஸ் மா அதிபர் பதவி மாற்றம் வரலாம்!

## தெற்கு ஊடகம் தகவல்



பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிகளில் மாற்றம் செய்யப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன என அமைச்சு வட்டாரத் தகவல்களை ஆதாரம் காட்டி தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரட்ன மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் ஆகியோரின் பதவிகளில் இவ்வாறு மாற்றம் செய்யப்பட உள்ளன.

அண்மையில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் அடிப்படையில் இவர்களின் பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

தங்களது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்கத் தவறினார் என அண்மையில் பல அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

தகுதியில்லாத பொலிஸ் உத்தியோகத்தர்களை சிபாரிசின் அடிப்படையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளாக அரசியல்வாதிகள் நியமித்துக் கொண்டதன் விளைவே இந்த வன்முறைகளை கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணம் என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களின் காரணமாக பொலிஸ் மா அதிபருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது. பொலிஸ் மா அதிபரும், பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பிரயோகித்த அழுத்தம் காரணமாக காலி முகத் திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்க முடியவில்லை என மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீட்டுக்குத் தீ!

அநுராதபுரம் இபலோகம பிரதேசத்தில் அமைந்துள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீடுக்கு தீவைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு ஒரு குழுவினரால் இந்த வீடு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் திலகபுரத்தில் உள்ள வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இவரது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பாரிய அளவிலான மக்கள் எரிபொருள் பெற வந்திருந்தனர். ஆனால், போதிய எரிபொருள் இல்லாததால், சிலருக்கு எரிபொருள் கிடைக்கவில்லை. ஆத்திரமடைந்த மக்கள் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீட்டிற்கு தீ வைத்துள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவத்தின் போது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உரிமையாளரும் அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர்.

அப்பகுதியில் வசிப்பவர்கள் உடனடியாக தீயை அணைத்தனர் எனவும், தீயில் பல சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் இரண்டு பிள்ளைகளின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்களும் அடங்குகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர். எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் மகன் ஒருவர் இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -18



### அருவமாக வந்த உதவிகளும் தமிழ் மக்களின் அணுகுமுறையும்

அருவமாக தமிழ் மக்களுக்கு சர்வ தேசத்தின் ஊடாக ஒரு குரு வந்தும் அவரைத் தமிழ் மக்கள் சரிவரக் கண்டு கொள்ளவில்லையோ என நான் எண்ணுவது உண்டு. அந்தக் குருவும் ஆரம்பத்தில் அருவமாக உணவு வடிவத்தில் தான் வந்தார்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தைத் தடுத்து, வடமராட்சி பகுதியைக் கைப்பற்றி, அங்கிருந்து முன்னேறுவதற்காக வியூகம் வகுத்தார். பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அப்பிரதேசத்தை துவம்சம் செய்த போதும் புலம்பெயர் மக்கள் தத்தமது அரசாங்கங்களின் உதவிகளைக் கோரினர்.

இந்திரா காந்தியின் காலத்திலிருந்து இந்தியா தொடர்ந்து இலங்கைத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரலெழுப்பிப் பேசி வந்தது.

தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையாலும் சர்வகட்சிக் கூட்டங்களின் முடிவுகளினாலும்பொருத்தமான தீர்வுகளை எட்ட முடியவில்லை என ஜே.ஆர். சாட்டுக்கள் சொல்லி கையை விரித்துக் கொண்டிருந்தார்.

ராஜீவ் காந்தி தடைகளை நீக்க கோரியும், வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அத்தியாவசியப் பொருள்களை அவசியமாக அனுப்ப வேண்டுமென்றும் கேட்டும் அவை செய்யப்படவில்லை.



அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் தமிழ்ப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அதனை வடபகுதியில் உடைத்து நிர்மூலமாக்கும் திட்டமாகவே வடமராட்சி தாக்குதல் தயாரிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமானத் தேவைகளை விடுதலைப்புலிகளின் அமைப்பான தமிழர் புனர்வாழ்வு நிறுவனமே கையாண்டு வந்தது. அதன் சர்வதேச செயற்பாட் டாளராகப் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் குடியிருந்த ஜோய் மகேசன் இயங்கினார்.

அரசியல் கருத்தாக்கங்களில் அவரும் நானும் வேறுபட்டிருந்தாலும் நாம் நல்ல நண்பர்கள். தமிழ் மக்களின் பொதுவான விடயங்களில் முடியக் கூடியவற்றை ஒருமித்துச் செய்ய முயற்சித்தோம். வடமராட்சியின் அட்டூழியங்களைஒட்டிஅத்தியாவசியபொருள்களின் பற்றாக்குறையையும் தட்டுப்பாட்டையும் சர்வதேசத்திற்கு புலம்பெயர்ந்த மக்கள் வெளிக்கொணர்ந்து, அவசர உதவிகளுக்காக அழுத்தம் தந்தனர்.

ஆஸ்திரேலிய அரசையும் அங்கிருந்த தமிழ் மக்கள் அழுத்தம் தந்து உடனடி நிவாரண உதவிகளுக்குக் கோரிக்கை வைத்தனர். அவர்களின் ஏற்பாடுகளில் நிவாரணப் பொருள்களைத் தங்களது தூதரகத்தின் ஒழுங்கில் கொழும்பிலிருந்து வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வராத துறைமுகத்துக்கு அனுப்புவதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இறைமையுள்ள அரசு என்பதால் ஆஸ் திரேலிய அரசு ஸ்ரீலங்கா அரசுடன் பேசி ஒப்புதல் பெற்று செயற்பட முனைந்தது. அந்த முயற்சிகள் இராணுவ நடவடிக்கைகளால் குழம்பி விடக் கூடாது என்பதிலும் அக்கறையும் கொண்டிருந்தது.

வடமராட்சியின் நிலைமைகள் அவதானிப்பதற்காகவும், விநியோகங்களைக் கவனிக்கவும் புலம் பெயரில் சர்வதேசக் குழு ஒன்றை அமைப்பது என்ற சமர்ப்பணத்தை பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஏற்றுக் கொண்டிருந்தார். ஆயினும், பின் நடந்தவற்றினாலும், அந்த உத்தேச சர்வதேச குழுவில் விடுதலைப் புலிகள் என அவர்கள் (அரசுத் தரப்பு) கணித்த சிலர் இணைக்கப்பட்டமையாலும் பின்னர் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

இந்தப்பொருள்கள்யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு சென்று சேர்வதை ஒட்டி ஜோய் மகேசன் புலிகளுக்காக எடுத்த முடிவுகளில், நிவாரண பொருள்கள் ஆஸ்திரேலிய தூதரகத்தின் அதிகாரிகளால் நேரடியாக தமிழ் அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்திடமே கையளிக்கப்பட வேண்டும் என திடமான நிலையில் இருந்தார். தமிழ் மக்களின் நிலைமை பற்றி எவ்வளவோ பேசியும், அது தமிழ் மக்களது இறைமையை ஒட்டியது, அவர்களது இறைமையையும் மதித்து, அவர்களின் ஏகப் பிரதிநிதிகளும் அவர்களின் பாதுகாவலர்களுமான விடுதலைப்புலிகளிடமே அவை கையளிக்கப்பட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு தாம் ஸ்ரீலங்காவின் இறைமையை ஐ.நாவின் கடப்பாடுகளை ஒட்டி மீற முடியாது, அவர்களின் ஊடாகவே அவற்றை விநியோகிப்பதற்காகக்கையளிக்கவேண்டும் என்று அறிவித்தல் தந்தார்கள் ஆனால் விடுதலைப் புலிகள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

இடையில் பலமான, மனிதாபிமான மற்ற தீர்மானத்தை எடுத்த பாதுகாப்பும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தங்களது அனுமதி இன்றி எதுவும் தரையிறக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படக் கூடாது என்று இராணுவ தளபதிக்கு அறிவிப்புகள் விடுத்தார். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின் இராணுவப் பிரதிநிதி, தாங்கள் கப்பலிலிருந்து ஒப்புக்காக நிவாரணப் பொருள்களை இறக்கி அவற்றை உடனடியாகவே புனர்வாழ்வு நிறுவனத்தின் வாகனங்களில் விநியோகத்துக்காக ஏற்றுவோம்என்றுஒத்துக்கொண்டாலும், தங்களது இறைமையை நிலைநாட்ட தங்களது உறுப்பினர்களே அவற்றை இறக்கி, ஏற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு புலிகள் தரப்பில் தொடர்ந்தது.

இதன் பின் எனது நாட்டத்தை இவை எல்லாவற்றிலும் இருந்து தவிர்த்துக் கொண்டேன். ஜோய் மகேசனுடனான ஈடுபாடும் நின்றுவிட்டது.




உணவுப் பொதிகளை வானத்திலிருந்து போடுவதற்கான ஏற்பாட்டை இந்தியா செய்தது. ஸ்ரீலங்காவின் இறைமையைக் கணக்கெடுக்காது, மதிக்காது, தமிழ் மக்களுக்கென இவை ஸ்ரீலங்காவின் வான் பரப்பு அதிகாரத்தையும் இறைமையையும்மீறிச்செய்யபட்டு, ஜே.ஆரைப் பணியவைத்து, அவரது நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல், இலங்கை – இந்திய ஒப்பந் தமும் ஏற்படுத்தப்பட்டது.

இறைவன் பக்தனைக் கையில் பிடித்து என்னோடு வா என்று கூட்டிப் போன புராணங்களின் சுவடுகள் போல, ராஜீவ் தமிழ் மக்களை என்னோடு வாருங்கள், இந்தப் பேரினவாதத்தின் மீது பல அழுத்தங்களை தந்துதான் விடிவு காண வேண்டும் என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்த வரலாறு வேறுபட்டது. அதனை முன்னர் விரிவாக ஒரு தொடரில் எழுதி இருந்தேன்.

அவ்விவகாரத்தில் எழுந்த விளைவுகளே, தமிழ் மக்கள் இன்னும் பக்குவப் பட வேண்டும் என்ற விதியின் நியதியோ தெரியாது. முள்ளிவாய்க்காலில் அவர்கள் பசிக் கொடுமை தாளாமல் வானத்தைப் பார்த்துக் குரல் எழுப்பியபோதும், எதுவும் இந்தியாவிடமிருந்து வரவில்லை. போரின் இறுதி வெற்றிகளுக்காக இந்தியாவின் வெளிநாட்டு மந்திரிகளாக இருந்த கிருஷ்ணாவும் பிரணாப் முகர்ஜியும் தாராளமாக உணவு அனுப்பப்படுகிறது, உணவுப் பற்றாக்குறை என்பது விடுதலைப்புலிகளின் பிரச்சாரம் என சர்வதேசத்திற்குச் சொன்னார்கள்.

ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இது ஒரு பொறி என்றும், இந்தியா சுய நலத்துக்காக ஆக்கியது என்றும் பிரசாரத்தில் இயங்கிய விடுதலைப் புலிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் பின் அது பற்றி எழுதிய வியாக்கியானங்கள் எவ்வளவு? அவற்றை முன்னெடுத்துப் பிரசாரப்படுத்த செலவழிக்கப்பட்ட நிதி, புத்திஜீவிகளின் நேரங்கள் எவ்வளவு? பின்னர் 13 ஆம் திருத்தம் அடியோடு உதவாது என்று அதனை நிராகரித்தவர்கள், அதற்கு மாற்றம் ஏற்படுத்தி, நடைமுறைப்படுத்துவதை விட்டு, அது இல்லாமலாக்கப்பட வேண்டும் என்ற அரசியல் நடத்தினர். பக்கம் பக்கமாக அவற்றைப் பற்றி எழுதியவர்களின் சிந் தனைகள் மனப் பக்குவம் அடைந்து விட்டனவோ, என்னவோ! அதன் அமுலாக்கத்தை முதற்படியாகவாவது ஏற்கிறார்கள்.

பதின்மூன்றாம் திருத்தம் பற்றி எழுதப் பட்ட எத்தனை கட்டுரைகளை, புத் தகங்களை, பேச்சுக்களை நெருடும் போது இன்று அடைந்துள்ள பக்குவங்கள் பெருமளவில் தெரிகின்றன. அந்தப் பக் குவங்கள் மீண்டும் அருவமாகவே இறைவன் உணவுவழியாகதமிழர்களுக்காகவெளிப் பட்டான். அதன் அணுகுமுறை யைப் பார்க்கலாம்.


(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# 2024 வரை தேர்தல் இல்லை; கோட்டா - ரணில் அரசு திட்டம்

## பொருளாதார மீளெழுச்சிக்கே முன்னுரிமை





கொழும்பு, மே 23

இலங்கையில் 2024ஆம் ஆண்டு வரை எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் இருக்க கோட்டாபய – ரணில் தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது என அறிய முடிகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில்கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த வருடம் முழுவதுமாக பொருளாதார மீளெழுச்சிக்கான திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நட்பு நாடுகளின் ஒத்து ழைப்புகளை வலுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவற்றுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முதல் விஜயமாக இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செல்லவுள்ளார்.

### தெணியான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், வல்வைக் கல்வி மன்றத்தின் முன்னாள் ஆசிரியருமான 'தெணியான்' என்று அழைக்கப்படும் வடமராட்சி பொலிகண்டி, தெணி என்ற இடத்தைச் சேர்ந்த கந்தையா நடேசன் நேற்றுத் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

1964இல் 'விவேகி' சிற்றிதழில் வெளிவந்த 'பிணைப்பு' எனும் சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து 400க்கும் மேற்பட்ட சிறுகதைகளை ஈழத்தின் பிரபலமான சஞ்சிகைகளான மல்லிகை, ஜீவநதி போன்றவற்றிலும், தமிழகத்தின் சிற்றிதழ்களிலும், வீரகேசரி, ஈழநாடு, தினகரன், தினக்குரல் போன்ற தேசிய நாளிதழ்களிலும் வெளியிட்டு ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளார். சிறப்பாக சுமார் 150க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 30 வரையான கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள், நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், செவ்விகள் என்பன இவரது படைப்பிலக்கியத்தின் உன்னதமான அறுவடைகளாக உள்ளன.

தமிழ் இலக்கியத் துறையில் அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலாபூசணம், சாகித்திய இரத்தினா போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். அவரது நூல்கள் பலவற்றிற்கு சிறந்த நூல்களுக்காக வழங்கப்படும் சாகித்திய விருது பல தடவைகள் கிடைத்துள்ளன.

---

### டிக்கோகார்சியாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தும் இந்தியாவின் முகாம்களில் இருந்தும் கனடாவிற்கு தப்பிச் சென்ற சமயம் டிக்கோ கார்சியாத் தீவின் அருகேவர்களது படகு பழுதடைந்தது. அவர்கள் மீட்கப்பட்டு கடந்த ஓர் ஆண்டு காலமாக டிக்கோ கார்சியாத் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஓர் ஆண்டாக மக்களே இல்லாத படை முகாமின் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களே இவ்வாறு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா வழியாக கனடா செல்லும்போது டிக்கோ கார்சியாவில் தங்கியுள்ள பிரித்தானியப் படைகளால் காப்பாற்றப்பட்ட 89 பேருக்கும் உணவு, உடை, தங்குமிட வசதிகளை வழங்கும் பிரித்தானியப் படைகள், தம்மை பிரித்தானியாவுக்குக் கொண்டு சென்று அங்கு தஞ்சம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மாவத்தகமவில் சனியிரவு ஒருவர் சுட்டுக் கொலை

மாவத்தகம, பரகஹதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த நபர் மாவத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சிங்கதெனிய, பரகஹதெனிய பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்தியது யார் என்பது தெரியவரவில்லை. சந்தேக நபர்களைக் கைது செய்ய மாவத்தகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

---

### ஜோன்ஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றியிருந்த பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மத்தியில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆற்றிய உரையே அவர்களைத் தாக்குதலுக்குத் தூண்டியது என பலராலும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மேலும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளிநாடு செல்வதற்கு நீதி மன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

---

### வெளிவிவகாரச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய செயலாளராக அருணி விஜேவர்த்தன நியமிக்கப்படவுள்ளார். வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதற்கான முன்மொழிவை செய்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு ஒப்புதலை வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய செயலாளராக நியமிக்கப்படவுள்ள அருணி விஜேவர்த்தன வெளிநாட்டு சேவையில் பணியாற்றிய மூத்த அதிகாரி என்பதும் அந்த சேவையில் இருந்து முன்கூட்டியே ஓய்வுப் பெற்றுள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

முன்னதாக வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பதவியை தக்கவைத்துக் கொள்ள அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே மேற்கொண்ட இறுதிநேர முயற்சியும் தோல்வியடைந்தது.

இதனையடுத்து அவர், கடந்த செவ்வாய்க்கிழமையன்று தமது அலுவலகத்தில் இருந்து தனிப்பட்ட உடமைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இரண்டு கோடி ரூபா பொருள்களுடன் யாழில் கடை முற்றாக எரிந்து நாசம்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதியில் உள்ள பிளாஸ்ரிக் விற்பனை நிலையம் நேற்று காலை தீப்பற்றியதில் 2 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பொருள்களுடன் முற்றாக எரிந்து சாம்பலானது.

பிளாஸ்ரிக் கடையின் பிற்பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஏற்பட்ட தீ முழுமையாகப் பரவியதால் 2 கோடி ரூபா பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின.

இவ்வாறு தீயில் அகப்பட்ட கடையில் நான்கு பேர் படுத்துறங்கிய அதேநேரம் நேர் எதிரே நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலக மானசிறிதர்திரையரங்கின்பாதுகாப்புக்கு 4 இராணுவத்தினர், பொலிஸார் பாதுகாப்புப் பணியில் இருந்த வேளை இந்தத் தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

கடையில் தீ பரவியபோது பொருள்களை மீட்க முயற்சித்த ஊழியர் ஒருவரும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தீ பரவிய சமயம் வெளியில் ஓடி வந்த போது தீ வீதிவரை பரவி விட்டது. இதன் பின்பு யாழ். மாநகர சபையின் தீயணைப்புச் சேவைக்குத் தகவல் வழங்கப்பட்டபோது தீயணைப்பு வாகனம் வந்த போதும் தீயை அணைக்க முடியவில்லை என்று காயமடைந்த ஊழியர் தெரிவித்தார்.

## ஹரீன், மனுஷவின் செயல் மிகவும் அருவருக்கத்தக்கது

### போட்டுத் தாக்குகின்றார் சஜித்

எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இவர்களின் இருவரினதும் இந்தச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் நல்ல கருமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்கும் எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் நாம் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம். இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் எமது கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டுள்ளதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது கட்சியிலிருந்து உறுப்பினர்களை அரசு பக்கம் எடுத்தால் எமது ஆதரவை வாபஸ் பெறுவோம் எனவும் நாம் ஏற்கனவே தீர்மானித்திருந்தோம். இந்நிலையில், ஹரீனுக்கும், மனுஷவுக்கும் அமைச்சுப் பதவிகளை அரசு வழங்கியுள்ளதால் அரசுக்கான எமது ஆதரவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூடி பரிசீலிக்கும்.

- என்றார்.

---

### ஐம்பதாயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

17 கோடி ரூபாவை) வைத்திருந்த 36 வயதான ஒருவர் வெலிக்கடை பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார். பண சலவைச் சட்டத்தின் அடிப்படையில், பணமோசடி செய்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.